
உ

குருவே துணை

# திருமுருக கிருபானந்தவாரி சுவாமிகள் தோத்திரப்பாக்கள்



இயற்றியவர்:

நரசிங்கபுரம் ஞானாசிரியர்

சாது. குழந்தைவேற் சுவாமிகளின் மாணவர்

குகத்திரு. சோ. ப. திருவேங்கடம் அவர்கள்.

சத்திய ஞான வேதாந்த சபை,

நரசிங்கபுரம், போரம்பாக்கம் P. O.,

திருவள்ளூர் தாலுக்கா.

சற்குருப்யோநம:

# காங்கேயநல்லூர்

## அருள்மொழி அரசு

# திருமுருக கிருபானந்தவாரி சுவாமிகள்

# தோத்திரப்பாக்கள்

இஃது நரசிங்கபுரம் ஞானாசிரியர்
சாது. குழந்தைவேற் சுவாமியின் மாணவர்
**குகத்திரு. சோ. ப. திருவேங்கடம்** அவர்களால்
இயற்றப்பெற்று,

ஷையூர் ஞானாசிரியர் மாணவர் ஆண்டி, முருகேசமுதலியார், ஆ. பெ. தேவராச முதலியார், ஆ. ந. கிருட்டினப்ப முதலியார், ந. மு. ஏழுமலை முதலியார் ஆகியவர்களின் பொருளுதவி கொண்டு வெளியிடப்பட்டது.

1955.

திருப்புகழமிர்தம் அச்சகம்,
144, சாமிநாயகன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே. —திருமந்திரம்.

சிவபக்தியின் மேம்பட்டது குருபக்தி; குருபக்தியில்லாதவனுக்கு சிவபக்தி விளையாது; விளைவதாகக் காணினும் கருதினும் அது "நடிப்பும், மயக்கமு"மே யாகும்.

குருபக்தியே சிவபக்தி; "குருவே சிவன்; சிவனே குரு" என்பது சைவசாத்திரத் துணிபு; ஆகலின் குருவைச் சிவபெருமானாகப் போற்றுவது சைவசம்பிரதாயம்.

சிவாநுபூதிப் பெருவாழ்வாகிய ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவருளால், மனநலன், சைவநலன் என்றின்னோரன்ன நன்னலன்கள் முழுதொருங்கு வாய்க்கப்பெற்ற ஒருவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு யாத்த இந் நூல் பரமசற்குரு ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவடிக்கண், அர்ச்சித்த நன்மலராகுக; குகனடியார்க் கமைத்ததொரு நல்விருந்தாகுக; இச்சொன் மலரினின்றும் பிரிவறியாத 'குருபத்தி' யென்னும் சிவாநந்தம் பரவுக; இதனை இயற்றினோரும், வெளியிட்டோரும் 'ஸ்ரீகுக பரப்ரஹ்மத்தின் அருளுக்கு உரியராய் வாழ்க' வென அப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

மன்மத ஹு
ஆவணிமீ ௩௧

**ஈசானசிவாசாரியர்,**
பழநி.

# சிறப்புக் கவி

மகாவித்வான்
ஆறுமுக நாவலர்

தங்கல்
சென்னை
21-6-55

பூமிசை மேவிய புண்ணியன் படைப்பில்
நாவன்மை வாய்ந்து நல்லுரை பகர்வோர்
சிலரே அவருள் சிறந்த நல்லறமும்
நலமும் குணமும் அருளும் அன்பும்
ஒருங்கமைந் திலங்குவோர் ஒருசிலரே உளர்

இருநிலத் தித்தகு சிலரில் உத்தமர்
சித்த சுத்தியும் சீரிய பண்பும்
நித்தமும் நிமலனை பத்தியாய்ப் பரவும்
உத்தமர் கிருபா னந்தவாரி என்
றித்தலத் துறைபவர் ஏத்திப் புகழ்வர்
அத்தகு நலமுடை அவனடி போற்றி
சித்தத் தவனை சிறந்தநற் குருவாய்
கொண்டே அவன்புகழ் கூறிப் பாடிய
தொண்டன் தூயன் துலங்கிடு அறிஞன்
மண்டலம் புகழும் திருவேங்கடத்தன்
விண்டமிழ் வளமும் வளமுடைச் சீர்களும்
சிறக்கப் பெற்று சீலமதோடு
அறச்செய லாற்றி அவனியி லோங்குக.

ஆறுமுக நாவலர்.

உ

திருத்தணிகேசன் துணை

# சிறப்புக் கவி

தேனனைய சொற்கொண்டு திதிக்கும் வண்ணம்
திருப்புகழின் பெருமையெலாம் சொல்ல வல்ல
ஞானநிலைத் தவத்தினராம் கிருபானந்த
நம்பியிடம் முருகனொளி விளங்கக் கண்டே
ஊனமெலாம் போக்குகுரு இவர்தான் என்றே
ஓர்ந்ததிரு வேங்கடப்பேர்ச் சீலன் செம்மை
ஆனமொழித் தோத்திரமாச் சொல்லி யுள்ள
அருட்பாக்கள் அவனிதலத் தோங்கு மன்றே.

4-10-54. தணிகைமணி

**வ. சு. செங்கல்வராய பிள்ளை, M.A.**

---

கேட்கும் பெருஞ்சொற் க்ருபானந்த வாரியின்சீர்
வேட்குமுள மேவுதிரு வேங்கடவன்—மாட்சியுறச்
செந்தமிழ்ப்பாவா லுரைத்துச்சிந்தை மகிழவைத்தான்
சந்ததமும் வாழ்க தழைத்து.

**கி. வா. ஜகந்நாதன்.**


4-10-54 (ஆசிரியர்: "கலைமகள்")

# மதிப்புரை

அன்பின் வடிவமும் அருள் தரும் கலை வடிவமும் ஒன்று சேர்ந்து, ஆனந்த வடிவமாம், அமமை வள்ளி தேவசேனு சமேத சிவசுப்ரமண்ய சுவாமியை அகக் கோயிலில் வைத்தும், புறக்கோயிலில் வைத்தும், அகில உலகங்கள எல்லாம் சுற்றிச் சுற்றி ஒரு இமைப்போதும் மறவாது, உலக மக்கள் பிறப்பிலே உள்ள, மாக்கள் தன்மைவாய்ந்த ஆன்மாக்கள் உய் யவே அவதாரம் செய்த சுக சமுத்திரமாக விளங்கும் கிருபானந்தவாரியார்மீது குருஸ்துதி பாடிய திருவிற்கோல க்ஷேத்திரத்திற்கடுத்த நரசிங்கபுரம் திருவேங்கடச் செம்மல், சீர்சான்ற இன் தமிழால் என்றும் இறைவனையும் பாடும் இயற்கை பெற்று என்றும் இன்புற்று, இல்லற நல்லறம் இனிமையா யியற்றி, பெற்ரோர், மற்ரோர், கற்ரோர், உற்ரோர் உறவினத்தோர், எல்லோர்க்கும் இன்பமாய் நடந்து, இறைவி, சமேத இறைவனை கைவரப் பெற்று என்றும் இன்புற்று வாழ்க.

அடியார்க்கு அடிமை,

**திருமயிலை. கே. எஸ். காஞ்சனமாலை அம்மாள்.**



உ

முருகா

# காங்கேயநல்லூர்

அருள்மொழி அரசு

# திருமுருக கிருபானந்தவாரி சுவாமிகள்

# தோத்திரப்பாக்கள்

## விநாயகர் துதி

குறள்வெண்பா

செல்வ விநாயகனே சீர்பெறச்செய் இப்பதிகம்
பல்வளந் தான்பெருகப் பார்த்து.

## முருகர் துதி

முத்தித் தருமரசே மூவர் பணிமுதலே
பத்திக் கிரங்கும பழமபொருளே—எத்திக்கும்
நீயே யெனவணங்கி நினனருளால் வாழ்கினறேன்
தாயே முதலே தனித்து.

## இராமலிங்கர் துதி

குருவடிக்காம் நற்பதிகம் கூறத் திருவருள்செய்
திருவிராம லிங்கமெய்த் தே.

## குரு துதி

அருண்மொழிக்காம் நற்பதிகம்அன்புடனிங் கோதும்
பொருள்தோன்றச் செய்குருநீ போந்து.

## போற்றிமாலை

திருவருள்நோக் காலெனது சித்தம திரித்த
ஒருருவே உத்தமனே போற்றி-பருகமிர்த
மானானே போற்றி அடிநாயேன் நெஞ்சிடையே
தேனாகித் தித்திக்கும சீர்போற்றி-வானாகி
நின்றானே ஒன்றுமலா நின்மலனே எனமனத்து
ஒன்றாகி நிற்குமுயர் ஒண்பொருளே-குன்றா
ஒளியானே என்னை யுவந்தாண்டு கொள்ள
வெளியானே சால வெளியாய்-தெளியாதேன்
கற்றுப் பிதற்றுமது காதலொடுங் குற்றமெனக்
கொள்ளாதென உள்ளிருக்குங்கோமானே-கள்ளமிலா
உன்னடியார் ஏவற் றொழிலுவந்து நான்செய்யப்
பொன்னடிதா போற்றி புகழபோற்றி-என்னாளும்
மெய்யேநான் செய்கின்ற விண்ணப்பங் கேட்டருளி
அய்யே அருள அதுவேண்டுந்-துய்யதிருப்
பாதமது போற்றுமருட் பண்பருளி என்றனையும்
ஏதமற விங்காளல் வேண்டுங்காண்-காதலொடும்
செய்யா தொழிதியேல் தீவினையேன் போய்நரகுக்
கையா ஒருவ னெனவமைவேன்-வையகத்தார்
உன்னடியார் ஏதேனு மானா லுனையிகழ்வார்
என்னுடைய தீநெஞ்சை யாரறிவார்-பொன்னடிகள்
வைத்து மனமகிழ்ந்து வாயார நான்வாழ்த்தும்
பித்ததுவாம் பேரன்பே தந்தருளும்-சித்தாஞ்
சிவகிருபா னந்தவெனுஞ் செம்பொருளே போற்றி
அவக்கடலுள் ஆழ்வேனை ஆண்ட-தவக்கடலே
போற்றியருள் தண்முகிலே போற்றினேனென்
சாற்றுகுரு போற்றிச் சரண். [றென்றும்

## வேறு

சீர்தரு ஞானவா னந்தமாய்ச் சுத்த
சிவமய மாகுமெய்ப் பொருளே
ஆர்தரும் அருளால் ஆலியா லாங்கட்டி
ஆதல்போல் அனைவருங் காணப்
பார்தனில் மனித னெனவெழுந் தடியேன்
பரகதி யுணரமெய்க் குருவாய்
நேர்வரு கிருபா னந்தமெய்ஞ் ஞான
நிமலனை யனுதினம் பணிவாம். 2

அருளே வடிவாய் அமர்ந்தமெய்ஞ் ஞான
அற்புத சின்மய ஆதியே நின்னை
தெருளினி அருளெனப பற்பல வாகத்
தேவனே நினைத்துதி செய்வகை யறியேன்
பெருவெளி காணாப் புன்மையேன் தனைப்
பேணியே காத்தருள் பெட்புற வின்றே
மருளரே அறியா மாவருண் மொழியே
மயக்கறுத் தாளிது தருணமே யருளே. 3

ஏமனென் தன்னை யினித்தொட ராத
இரும்பொருள் வடிவமாய் யானுமே விளங்கத்
தாமமே யணிந்த மாமணி மார்பா
சத்துவ சிற்கனக் குரவனே நின்னை
நாமகிழ்ந் தேத்தும் பக்குவம் இல்லேன்
நம்பனே பணிந்தனன் நவின்றிட வருவாய்
காமகோ பங்கள் கடிந்தமெய்ஞ் ஞான
கண்மணி யென்மனக் கசடற வருளே. 4

ஏதுமே அறியா இளைஞனென் றறிவாய்
என்குரு வானவா இறைவனே முதல்வா
வாதுசெய் யாதே மலரடி தொழுதேன்
மத்தனென் ஆண்டுகொள் இன்பமென் வடிவாய்
சாதுவே யினிநான் தன்னிலை யுணரத்
தக்கதோர் சாதனம யாவுமே தருவாய்ப்
போதெலா முனையே போற்றுவேன் என்றும
புனிதனே மறவேல் போதமே யருளே. 5

கடலாழுங் கல்லெனினும் கலத்தில் சேர்ந்தாற்
கடலாழா தக்கரையிற் சேருமா போல்
உடற்பிறவிக் கடல் ழ்வோர் கல்போல் வேனை
யுனதுதிரு வடியெனுமோர் கலத்திற் சேர்த்தே
விடமெ னு மரவதுசேர் கடலா ழாநல்
வியனஞான தீரமதில் மேவச் செய்வாய்
மடமகற்றித் திடமருளகாங் கேய நல்லூர்
மாநகர்வாழ நற்கிருபா நந்தத் தேவே. 6

கற்றோரும் மற்றோரும வியக்கும ஞானக்
கனிமதுரச் சொல்லருட்கற் பகமே நின்றன்
பொற்பதமே துணையாகப் பிடித்த வென்னைப்
பூரணமாம மெய்ஞ்ஞானப் புணரி தன்னுள்
நிற்கவருள் செய்வாயே லுய்வே னேழை
நீள்பிறவி வழிதூர்த்தாள நிமலா போற்றி
பொற்பமர்காங் கேயநல்லூர் தன்னுள்மேவும்
புனிதமமர் நற்கிருபா நந்தத் தேவே. 7

உடலுற்ற வைவருட னுறவா காதே
யுனதருட்பெற்றென்னுளந்தானுவக்கச்செய்தே
கடலலைபோல் வருபிறவித் துன்பம் நீங்கிக்
கதிகாண வென்றென்றுங் கருணை செய்வாய்
படவரவில் நடித்தருண்மால் மருகன் ஞான
பண்டிதன் தன் திருவருளைப் பாங்காய்ப் பெற்ற
திடஞ்சார்நல் லோருறுகாங் கேய நல்லூர்
திருநகர்வாழ் நற்கிருபா னந்தத் தேவே. 8

துரியநிலத் தவரெல்லாம் போற்றும் ஞான
சுந்தரமார் மெய்ப்பொருளே துகள்தீர் முத்திக்
குரியபெரு நெறியறிவு முணரா திந்த
உலகியலிற் சிக்கிமிக யுழல்வே னுக்குங்
கரியாயிங் கெவையெவையுங் கலந்து நின்ற
கற்பகமே மெய்ஞ்ஞானக் கனியே தந்து
உரியவர மீந்தாள்காங் கேய நல்லூர்
ஒண்பொருளே நற்கிருபா னந்தத் தேவே. 9

முருகனடி மறவாநன் முத்தா ஞான
முழுமுதலே வென்றென்று முனித லில்லாத்
தருவனத்துள் உறைமுனிவர் தாமுங் காணாத்
தத்துவநன் னெறியாவுந் தழைக்கப் பெற்ற
குருவடிவே யெவ்வெவர்க்குங் குறையா ஞான
குணமருளுந் தெய்வசிகா மணியே நின்றன்
திருவடிச்சார் பளித்தாள்காங் கேய நல்லூர்
திகழ்தலுறும் நற்கிருபா னந்தத் தேவே. 10

திருத்தகுநான் மறையாவுங் காணா வொன்றே
திருமேனி கொண்டுலகோர் தெளியும் வண்ணம்
ஒருமுருக வடிவாகி யுலகி லென்றும்
ஔகத்தியர்க் கருள்செயநற் குருவாய் வந்த
பெரும்பொருளே ஓருருவாய் வந்த ஞானப்
பெருங்கடலே தடங்கருணை பேறே நின்றன்
னருளளித்திங் கெனையாள்காங் கேய நல்லூர்
அரும்பொருளாம் நற்கிருபானந்தத் தேவே. 11

முந்தைவினை யாலேநின் வழியிற் செல்லா
மூடனேனறன மீதுனது முளரித் தாள்சேர்
கந்தழிநன் னிலைகாணாக் கடையே னென்னைக்
கண்கணியா திங்குவிடிற் கலங்கிநிற்பேன்
எந்தைநின தருள்சற்றிங் குற்றால் வேறோர்
எண்ணமுறா தேகாந்தத் திருந்து வாழ்வேன்
சந்ததமார் காங்கேய நல்லூர் மேவும்
சத்வடிவ நற்கிருபா னந்தத் தேவே. 12

கருணைவடி வாயடியர் உளத்தே நின்ற
கழல்காட்டி யெனையாளுங் கண்ணே யென்றும்
மருள்நிறையும் சிறுநாயேன் வஞ்சம நீக்கி
மகிழ்ந்தெனது பவமாற்றும் மணியே சித்துப்
பொருள்நிறையும் திருப்புகழ்செந் தேனுண் டுய்யும்
புண்ணியர்தம் உளமிருக்கும புனித வாழ்வே
கருதரிய காங்கேய நல்லூர் மேவும்
கண்மணியாம் நற்கிருபா னந்தத் தேவே. 13

கலியுகத்தில் கண்கண்ட குரவன் நீயே
காண்பரிய நீயன்றித் துணைவே றில்லை
அலியெனவும் ஆணெனவும் சொல்லா வொன்றே
அருட்ஜோதி தெய்வமெனு மறிவே காட்டி
ஒலிவடிவா யிங்கொளிர்நான் மறைக்கு மெட்டா
ஒண்பொருளே நின்வடிவம் என்று ணர்த்தி
நலிவறச்செய் தாண்டருள்காங் கேய நல்லூர்
நன்னெறிசார் நற்கிருபா னந்தத் தேவே. 14

உலகுபுகழ் திருவமுதாம் முருகன் சீரே
உரைத்துலகோர் பவமாற்று முண்மைத்தேவே
யிலகுசிதா காசவரு ளின்பத் தேனை
யென்னுளகண் டின்புறவுஞ் செய்வா யின்றே
விலகலிலா மெய்தவத்தோ ருளத்தே யோங்கும்
மெய்ந்நிலையேயெவ்வெவர்க்கும்விளங்கச்செய்யும்
திலகமென நின்றொளிர்காங் கேய நல்லூர்
சீர்த்தியுறும் நற்கிருபா னந்தத் தேவே. 15

தெருவிடத்தே விளையாடித் திரிந்த வென்னைச்
சிவமாக்கி யாண்டருளக் குருவாய் வந்த
பெரும்பொருளே மெய்ஞ்ஞான பேறே நின்றன்
பெரும்புகழை விரும்பிதினம் பேசச் செய்வாய்
கருவிடத்தே யெனைக்காத்த கண்ணே ஞானக்
கற்பகமே யென்னுயிரிற் கலந்த தேவே
தருவளர்நல் காங்கேய நல்லூர் மேவும்
தண்ணளிசார் நற்கிருபானந்தத் தேவே. 16

அன்னையினுந் தயையுடைய வரசே நின்றன்
அடிமறந்தே அவந்தனிலே அயர்ந்துநாயேன்
முன்னைவினை யாற்படும்பா டெல்லாங் கண்டும்
மூடன்செய் பிழைகருதி முனியேலையா
இன்சொல்லடி யவர்மகிழ வினிய ஞான
இன்பூட்டி யாண்டருள்மெய்ஞ் ஞான வாழ்வே
சின்மயமார் காங்கேய நல்லூர் மேவும்
சித்துருவாம் நற்கிருபா னந்தத் தேவே. 17

அவம்புரிந்த வென்றனையும் மீட்டுண் ஞான
அருள்வழங்கி பெருவாழ்வு அடையச்செய்வாய்
தவம்புரிந்த அன்பரெலா மிருந்திங் கென்றும
தனிஞான வின்புற்றே சதுராய் வாழ
சிவம்மறந்து பவமடைந்தே யுழல்வேன் றன்னை
சித்தாந்தச் செந்நெறியிற் றிளைக்கச் செய்தே
நவமாகு நின்னடியா ருடனென் னுளும்
நன்கிருக்கச் செய்கிருபா னந்தத் தேவே. 18

கல்லாகு மென்னெஞ்சம் வஞ்ச மாதர்
கண்வலையில் சிக்கிமிகக் கலக்கு முற்று
சொல்லளவாத் துன்பமெனும கடலு ளாழ்ந்தே
சோர்கின்றேன் அடிநாயேன் துணையொன்றில்லேன்
பொல்லாவன் பவமாய்க்கும் மருந்தா முன்றன்
பொன்பாதத் துணைதந்தால் மயங்கேனெந்தாய்
சல்லாபக் காங்கேய நல்லூர் மேவித்
தவஞ்சார்ந்த நற்கிருபா னந்தத் தேவே. 19

கற்றறிந்த மெய்யுணர்ச்சி யுடையோ ருள்ளக்
கமலத்தே வீற்றிருக்குங் கடவுளே நின்
பொற்புறுமா மலரடிச்சீர் வழுத்தும் ஞானப்
புண்ணியர்தம்குழுவிலெனைப்புகுத்திங்கென்றும்
உற்றவருட் சிந்தனைதந் தின்பம் மேவி
யுடையாயுன் னடியவனென் றோங்கும் வண்ணம்
சிற்றறிவை விளக்குககாங் கேய நல்லூர்
சீருளார் நற்கிருபா னந்தத் தேவே. 20

உலகமது கானல்நீர்க் கொப்பா மென்றே
யுணர்ந்தடியேன் செம்பொருளின் எற்றம் காண
கலகமிலா சத்வகுண சாந்த முற்றே
கண்கலக்கந் தனைநீக்கி கலங்கா ஞான
சிலமுறுநற் பெருவாழ்விற் சேர்ந்திங் கென்றும்
சிறக்கவருட் செய்வாயே லுய்வே னேழை
குலவுதிரு காங்கேய நல்லூர் மேவும்
குணக்குன்றும் நற்கிருபா னந்தத் தேவே. 21

அத்துவித நிலையதனை யடியேன் காண
அன்புடனே நின்னடியிங் கடைந்தே னெந்தாய்
இத்தரையில் உனைப்போல்வார் யாருங் காணேன்
யிரும்பெருங்காங் கேயநகர் இன்பாய் மேவும்
உத்தமனே உன்னருளிங் குறவுஞ் செய்வாய்
ஊர்நகைக்க யானழுத லுயர்ச்சி யாமோ
சத்துவமாம் விருத்தியெழும் மார்க்கந் தன்னை
தானருளாய் நற்கிருபா னந்தத் தேவே. 22

என் துயரிங் கினிதகற்றி யின்பார் ஞானம
இனிதருள மாமுருக னுருவாய் வந்தோய்
உன்புடைநான வந்தடையு முணர்ச்சி தனனை
யுளளிருந்திங் கருளுணர்த்த யுணர்வ தல்லால்
என்செயலா லியானுணர்த லெளிதிங் காமோ
எனபோல்வார் இடராறுக்கு மெந்தா யெந்தாய்
வன்புறுவெம துயர்கெடநல் வாழ்வார் ஞானம
வழஙகியருள நற்கிருபா னந்தத் தேவே. 23

நீர்க்குமிழி யாமுடலை நிலையென றெண்ணி
நித்தியமன நிலைமறந்த நீச னேனை
யார்க்குஙகடை யாயுழலும கடையேன தன்னை
யாராகாபபர் கைவிடிலோ கலஙகி நிற்பேன்
பார்க்குளுயர் வருளநெறியே பரவச் செய்தே
பதிபபொருளாம திருமுருகன பாதத் தின்பம
சேர்க்குமருள மெய்ஞ்ஞானச் செல்வந் தனனை
சிறககவருள நறகிருபா னந்தத் தேவே. 24

அன்னையினுந் தயையுடைய வரசே நின்றன்
அடிமறந்தே யடியனுழல் வழகி தாமோ
என்னையெனனில் யா ருணரா தேழை வாழ்ந்தால்
இஙகடியர் ஏசாரோ யென்னை யென்றும்
மனனிதய மலர்மலரச் செய்தே ஞான
மாமணியென னுளவந்தே மாயை யாய
கனமமறச் செய்தடியேன உண்மை காண
காத்தருளசெய் நற்கிருபா னந்தத் தேவே. 25

வாழ்வருள்காங் கேயநகர் வந்து நின்றன்
வடிவழகைக் கண்டுமிக வாரியுண்ணேன்
காழ்வயிரத் தூணேபோல் கடையேன நிற்பேன்
கருதரிய திருமுன்கை குவித்து நில்லேன
ஏழுபிறவி துயர்கொடுவிங் கிளைத்தேன தன்னை
இனியநின தருளகொடுயார் தேற்ற வல்லார்
பாழநீக்கி வாழவருளநற் பாவே நல்கும
பண்டிதனும நறகிருபா னந்தத் தேவே. 26

மண்ணாசை கொண்டுலகில் மாயா துனறன
மலரடித்தேன உண்ணவருட் செய்கி லாயேல்
பெண்ணாசைப பேய்பிடித்த பித்த னேவன
பேரருட்கு மிதுவழகோ பெரிதுங கேளாய்
உண்ணாடு மகபபெற்றோர் உலகில் தளளார்
உத்தமனே நீதளளல் உயர்ச்சி யாமோ
பண்ணாடு மனபர்பணி செல்வ மாய
பரமகுரு நற்கிருபா னந்தத் தேவே. 27

கருவுற்ற நாளமுதலாய் கலந்து நினற
கற்பகமே யுனையெனறும கருத கில்லேன்
வெருவுற்று வீணயர்ச்சி விளைவி னல்லால்
வேதநெறி நிற்குநிலை விழைந்தே னில்லை
பருவுருமிவ் வுடல்கொணடு பரத்தி னுண்மை
பண்புறவிங் கறியாவெம பாவி யானேன
திருவருளின் திறமும்நற் சீர்த்தி யாமோ
சீரருளார் நற்கிருபா னந்தத் தேவே. 28

அருங்கிருமிக் குறைவிடமாம் யாக்கை தன்னை
அடிநாயேன் விரும்பியுழல் அழகி தாமோ
பெருங்கவலைக் கிடமாகி வருத்தும் பொல்லாப்
பேய்மனந்தான் அடங்கவொரு வழிசொல் லாயோ
இருவினையாங் கயிறதனால் இணைத்திங் கென்னை
இடருறச்செய் தெமன்பாசத் திருத்தி டாமல்
அறிவுருவாய் நின்றொளிர்மெய்ஞ் ஞானந் தன்னை
அறிவித்தாள் நற்கிருபா னந்தத் தேவே. 29

காகமென துடலெனவுங் கரைந்து நிற்க
கழித்தனன் நான் பலபகல்தான் கடையே னாக
ஆகமிறை வேண்டுமென வனல்தான் சொல்லும
அத்தனைக்கு முரிமையுறும யாக்கை தனனை
இகமதனில் எனதென்றே ஏழை வாழ்ந்தால்
ஏய்க்காரோ நினதடியர் என்னைச் சற்றும்
அகமதனில் ஒளிர் அறிவை அடிமை காண
ஆண்டருள்செய் நற்கிருபா னந்தத் தேவே. 30

உத்தமமாம் சத்துவநல் விருத்தி கொண்டு
உண்மையதா மென்னுருவைக் காண லெனறே
இத்தரையி லென்னுருவைக் காணு தேழை
இவனவாழ்ந்தால் நின்னடியார் ஏசா ரோதான
முத்தனைய மூரலுடன் மன்று ளாடும்
முழுமுதலின் பதம்போற்று மூட னேற்கும்
சித்துருவாஞ் சிவவடிவம் நீயே யென்னத்
தெளிவித்தாள் நற்கிருபா னந்தத் தேவே. 31

ஊதமயல தீாகருநெறி யின்றி யேழை
சிறுதொழிலே புரிந்துழலல் தெளிவிங் காமோ
அத்துவித நெறியுணர்ந்தோர் அடிக்கா மேவல்
அடிநாயென செய்துய்ய அறிவிப் பாயே
மித்தையதாம் பொருள்விரும்பி மேலாஞ் ஞானம
மிகவிழக்கு மெனமடமை என்னென பேன்யான்
சித்துருவாம் மெய்ஞ்ஞானச் செல்வ ருளளம
சேர்ந்தொளிரும நற்கிருபா னந்தத் தேவே. 32

மின்னனைய பொய்யுடலை விரும்பி யேழை
மேதினியில் மிகவாழ்ந்தால் மேலோர் என்றும்
மின்னனைய பொய்யுடல்தான் மறைந்து போமே
மெய்யாகா மெய்யெனும்பொய் யுடலந் தன்னை
என்னுளும மெய்யென்றே எண்ணி வாழும
இக்கொடியன் என்னுவான என்றிங் கென்னை
முன்னுன முத்தரெலாம் முற்றும் ஏசா
மூலமருள் நற்கிருபா னந்தத் தேவே. 33

எண்ணரிய பலபிறவி யெடுத்திளைத்த
ஏழைமதி யென்னென்பேன் எளியனேன் யான்
நண்ணரிய யெழ்பிறவி தன்னுள் என்றும்
இனிதாகு மானிடமென் றிறைநூல் சொல்ல
வண்ணமுறும் இத்தேகம் பெற்றும் ஞான
வழியறியா திவ்வேழை வாழ்ந்தால் மோனங்
கண்ணியமா யுறுகற்றோர் ஏசா ரோதான்
கனிந்தருள்செய் நற்கிருபா னந்தத் தேவே. 34

சென்றபல பிறவிதனில் செய்த கர்மம்
சேர்ந்ததுசஞ் சிதமெனவுந் தேர்ந்தோர் சொல்ல
நின்றநிலை யுடைத்தேகம நிகழ்த்தும் கர்மம்
நீடுதிரு வாகாமிய மதுவல் லாமல்
சென்றவினை தனிலெடுத்து தேகந் தந்து
சிரும்வினை தனை நுகரச் செய்து விட்ட
இந்நின்ற வினைக்கிடாய எனனை விட்டால்
எனனுமோ நற்கிருபா னந்தத் தேவே. 35

புல்லாதி தாவரமாய் போன நாட்கள்
போதாதோ யினனுமபல யோனி தன்னில்
செல்லாது திருவருள்தந் தென்னை யாள்வாய்
சிருறுநல் அனபருளம சேர்ந்து வாழும்
நல்லானே நல்லவர்க்கு நண்ப னேயெம்
நாயகனே நலமறியா நாயி னேனை
பொல்லாத வனெனறே தான் புறந்தள் ளாது
பொனனருள்செய் நறகிருபா னந்தத் தேவே.36

புறம்போக்கில் எனையாள்வார் புவியி லுண்டோ
புண்ணியனே நீயறியாப் புதுமை யாதோ
மறநெறிசார் வஞ்சமுறும் வாழக்கை தன்னுள
வாடியுளம் நொந்துயான் வருந்து மாறு
அறம் ஒறுக்க எனையயலில் தள்ளி விட்டால்
அடிநாயேன் போம்வழிதான்யாதோசொல்லாய்
அறம்வளர்த்த தாய்கனக வல்லி யீன்ற
அருண்மொழியார் நற்கிருபா னந்தத் தேவே.37

வினைக்கீடாய் வந்தவுடல் வீழு முனனம
　　விரைமலர்க்காம பூசனைகள் விரைந்து செயய
எனைததடுக்கும வல்வினைதான அகலு மாறு
　　இனிதருளாய எனறுமுன திணையார பாதம
வினையகல ஞானநிலை வெளியாயத தோனறும
　　விததகனே நீயல்லால் வேறா சொல்லாய
தனைநிகர்காங கேயநகர் தனனிற சார்ந்த
　　தவவடிவார் நற்கிருபா னந்தத தேவே.　　38

சிவஞசாரும அனபரெல்லாம சேர்ந்திங் கெனறும
　　சிவஞானப பாலமுதம தேககி யுணண
பவஞசாரும வனநெஞசப பாவி யெனறே
　　பார்த்தெனையும விட்டுவிடல் பணபோ சொல்லாய்
தவஞசாரும நல்லுணர்வு தந்திங கெனனைத்
　　தத்துவர்பால் நண்ணவருட் புரிகி லாயேல்
நவஞசாரும் வஞசநமன எனசெய வானோ
　　நல்லருள்செய நற்கிருபா னந்தத் தேவே.　　39

வெயயபொறி ஐந்தினவழி செனறிங கைய
　　வினைகேட ஞயுழலல விகிர்த மாமோ
பைய்யரவினுங் கொடிதாம பணபி லெனறன
　　பாழமனந்தா னடஙகவொரு பரிசுங காணேன
துய்யவருள் பெற்றொளிருந் தூயோர் நட்பும
　　துணையாகப பெற்றிலனென செய்வ னையா
அய்யமிலா அடர்நமனவந் தழிக்கும போது
　　யார்துணையாம நற்கிருபா னந்தத் தேவே.　　40

வினைமுடிவில் வருதூதற் கஞ்சா தென்றும்
    வியத்தகுமா வாக்கியமே விளம்பு மாறு
எனைப்பணித்தா லாகாதோ யெந்தா யெந்தாய்
    எம்மிறையே நீயல்லால் யார்தான சொல்லாய்
கனைத்தெழுவெம் கருநிறமார் கரல தூதர்
    கைப்படா தெனையுன்றன் கமல பாதத்
திடா யெண்ணி யென்றென்றும ஏழை வாழ
    இன்னருள்செய் நற்கிருபா னந்தத் தேவே. 41

நிலைத்த பெரு சுவரிடையே நின்ற தீபம்
    நிலைகுலையா தந்நெறியில் நிற்கு மாபோல்
அலைத்துவினை பெருக்குமன மசையா துன்றன்
    அருள்வசத்தா லப்பெருசித் திரமே போல
நிலைக்கவருள் செய்தெனையும் நீங்கா ஞான
    நிமலமுறும் நிருவிகற்ப நிலைமேற் கொள்ள
கலைக்கதிப ஞயொளிரும கருணை சான்ற
    கண்ணவருள் நற்கிருபா னந்தத் தேவே. 42

என்வடிவாய் காணுபொருள் என்றும் எங்கும்
    இன்புறுநற் சிவவடிவாய்க் காணல் செய்வாய்
துன்புறுவெம் பிறவியிடை சேரா வண்ணம்
    தூயதிரு வருளருளி துகள்தான் தீர்ப்பாய்
இன்புறுநல் சிவயோகர் எண்ணும் எண்ணம்
    எளியேற்கு மேயுதிக்க வென்றுஞ் செய்வாய்
பொன்புரையும் திருமேனிப் புனித ஞான
    புத்தமிர்த நற்கிருபா னந்தத் தேவே. 43

சிற்றறிவால் சிற்றுலக வாழ்வுந் தேரு
சிற்றடியேன நினபுகழோ தேர்ந்து சொல்வேன்
மற்றறிவார் போல்யானும மண்ணின மீது
மாதவநின அருளுணர்த்து மாத வத்தால்
தெற்றெனநின புகழறிந்து சேவை செய்யும
செமமையுளம எறகருளிச் செய்வா யினறே
நற்றவர்தம அகமவேட்கும ஞான மூர்த்த
நாயகமாம நற்கிருபா னநதத் தேவே. 44

கற்றவர் வழுத்தும கற்பகக் கனியே
கலைவலான ஈனறசெங் கருமபே
மற்றவர் அறியா மாணிக்க மணியே
மதியிலி செயபிழை கருதா
துற்றருள செயயும ஒருபெருங் குருவே
ஒபபிலா மாமணிச் சுடரே
தெற்றென வென்னைத் தேர்ந்துகொண டருளே
தேடரும வாரிமெயத் தேவே. 45

விலையிலா மணியென வேண்டிநின அருளை
விழைந்தனர் நின்னருட் செல்வர்
புலைகொலை யுடைப்பெரும புல்லனே னினறு
புன்பொருள் நன்றெனக் கொண்டேன்
சிலைநுதல் கனக வல்லிதன செல்வா
செல்வநின அருளலா தில்லை
அலைவறு மனமிங் கருளிடின் எல்லாம்
அடைவுறும வாரிமெய்த் தேவே. 46

காலுறக் கலையும் காரது போலக்
கடையனே னுடலது கலையும்
மேலுறுங் கால தூதவெங் காற்றால்
மிகமிக அழிதரும யாக்கைப
பாலுள விருப்பம் குறைந்திலன இன்னும்
படிமிசை அடியனேன என றும்
நாலுள வேதப் பொருளதெளி வுறவும்
நன்றருள் வாரிமெய்த் தேவே. 47

பலபொருள் விளக்கும் பருதிபோல் எனது
பண்பிலா மனத்தினைத் திருத்தி
பலபொருள் விளங்கும் பரம்பொருள் உண்மை
பரிந்துளம் காணுறச் செய்வாய்
நலந்தெரி ஞான வழியினர் ஓரும
நாயக மாமணி விளக்கே
வலம்வரு அன்பர் தமக்கருள் ஞான
வள்ளலே வாரிமெய்த் தேவே. 48

சிலபகல் செய்த தீவினை யாவும்
திரண்டஓர் உருவென வந்த
நலமிலா வுடமபை நான்மிகப் போற்றி
நாள்கழித் திடுவனிங் கானால்
பலநலன் உறுமெய்ப் பாவலர் யாரும்
பார்த்தெனை ஏசுவ ரன்றோ
கலகல வெனமறை ஒலிபெரு மொழியே
காண்தகு வாரிமெய்த் தேவே. 49

மற்றுநீ யல்லால் உற்றவெம் துணைதான்
    மாநிலத் தாருளர் சொல்லாய்
ஒற்றெனு!மெய்பால் உயிரது புணரும்
    உண்மைபோல் உன்திரு வருளதான்
சற்றுமேல் சாரா தொழியினெங் கோவே
    சார்பவக் கடலிடை யுறுவேன்
முற்றுமிங் காண்டு முழுதருள் செய்வாய்
    முருகெனும் வாரிமெயத் தேவே. 50

மின்னே யனைய பொய்வாழ்வு
    பெற்றிங் கடியேன் மேதினியில்
பொன்னே பொருளே எனப்பலகால்
    புனித வெனனாள் போக்கு கின்றேன்
கொன்னே வாழ்நாள் கழித்தலலால்
    குலவி யிருதாள் குறித்தெண்ணேன்
என்னே என்தன் மடமைதனை
    எண்ணி அறியேன் ஏழையனே. 51

உறவும் பகையும ஒன்றாகக்
    காணும் ஞானம நாயடியேன்
பெறவுங் கருணை புரிவாயோ
    பேரார்ஞானப் பெருந்துணையே
நறவுந் தினையும் நனிவிரும்பும்
    நம்பன் வள்ளி மணவாளன்
அறமும் திறமும் அவனருளால்
    அடையப் பெற்ற ஆரமுதே. 52

தூண்டா ஞானச் சுடர்விளக்கே
　　தூமா மறையின் மெய்ப்பொருளே
வேண்டா வினையின் தொடக்கறுத்த
　　விமலா ஞான விழுப்பொருளே
பூண்தார் அணியும் புகழ்புயத்தாய்
　　புரியா யோகின அருளமுதம
மீண்டே யடியேன் பிறவியிடைப்
　　புகுதா வண்ணம் மிகவருளே. 53

பொன்னே யனைய புகழ்மேனிப்
　　புனிதா ஞானப் புதுமலரே
என்னே ஏழை முகநோக்கா
　　தெந்தா யெளியேற் கேசொல்லாய்
தன்னே ரில்லாத் தனிமுதலே
　　தவத்தோர் போற்றும் தனிமலையே
மன்னே ஞான மாமணியே
　　மதிதந் தருள வருவாயே. 54

பொன்னார்கழலேமிகநம்பிவேண்டுமென்புத்திதன்னை
என்னாரபூதேயினியேனு மென்னுண்மை யேற்கவைப்பாய்
நின்னுமமேதுதி செய்தின்ப மேவுறும் நேர்மை தன்னை
என்றுளில் யான்பெறுவேன் கிருபானந்த வெந்தைநீயே.

இன்றுட னென்றுமே இன்னருள்வேண்டி இறைஞ்சு
மென்றன்
முன்வந் தருளாய்முனிவரும் போற்றும் முதல்வ இன்றே
தன்வடிவுண்மை எனதுளந்தேறத் தளர்வுமற
சின்மய கிருபா னந்தநீ தாராய்த் திருவருளே. 56

ஓர்ந்தாரடையும் ஒருபரமெற்கு ஒளிர்வ தென்றே
சார்ந்துள் கிருபானந்த விங்கென்னுஞ் சதுர்மறை ர்ந்து
ஆர்ந்தோர் பரவும் அமலனே யுன்னை யனுதினமுஞ்
சேர்ந்தே துதிக்கும் வழியினித் தந்தாள் திருக்கறுத்தே. 57

உறவும் பகையும் உளத்தினில் நில்லா உணர்வுநிலை
மறமற வுள்ளே யுணர்த்துவாய் என்றன் உள்ளமுற
அறநெறி தன்னில் அடியனெற் குண்மை யருளுறகவே
துறவரும் போற்றும் தூயநற்றிருபா தொடர்ந்தா ளின்றே.

அருளே பொழியும்அகக்கண் உடையாய் அறிவறிந்தோர்
பொருளே தெனவே நினைக்கேட்டுளத்திற்புதுமைகொள்ள
தருவாய் விடையே் கிருபா னந்த சகத்திரளாம்
விரிவே யறவாண் டிருமையும் அற்ற வெளிஅருளே. 59

## அருள்மொழிப் பத்து

அற்பமும் முருகன் அருளலா தசையா
தா தலின அவனவடி வாய
பொற்புறு முனது புகழினை யலதோர்
புகழினைப் பாடுமா றுளதோ
நற்பயன் உலகர்க் களித்திட வுதித்த
நாயக நற்றமிழ் மொழியால்
அற்புத மிகவே அருமறை மொழியும்
அருண்மொழி அரசெனும் பொருளே. 60

காலனைக் காய்ந்த கறைக்கள னீன்ற
கருணைமா கடலென நினையே
சாலவர் தடைந்த தமியன்மீ துனது
தண்ணருள் செலுத்திவாழ் விப்பாய்

கோலமார் ஞானக் குருமொழி யேற்ற
குமரவேள் வா வென வுற்றோய்
ஆலவாய் அதனில் அருமறைப் பொழியும்
அருண்மொழி அரசெனும பொருளே. 61

யானெனுஞ் செருக்கு அறுத்தவர்க் குளது
நல்லருள் எனவுரைத் திருப்பத்
தானதைப் பெருக்கு மதியிலா மூடத்
தமியனேன அடையுமா றென்னே
மோனமார் துரியத் துள்ளொளி யாகி
முத்தொழில் நடத்துமா முருகன
ஆனநல் வடிவாய் அவனிவந் துதித்த
அருண்மொழி அரசெனும பொருளே. 62

வெயிலினிற் களைப்புற் றருநிழல் தேடி
வெங்தெழும பாலையை மேவித்
துயில்செயும அவனபோல் அனைமுதலோரை
துறந்துமிவ் வுலகவா தனையில்
பயிலல்செய் வீணன் சுகநிலை யதனில்
பதைப்பற விருக்குமா றுளதோ
அயில்கொளு முருகன அடிமலர் மறவா
அருண்மொழி அரசெனும பொருளே. 63

ஆசையோர் விஷத்தின் வகையதா முலகுக்
கறிந்தமா தீரர்க ளதனை
தேசுறு தோட திருட்டியென் மருந்தை
தெளிவுற வுண்டுநீக் குவரால்

பர்சம தகற்ற வலியிலி எளியேன்
பதமலர் அணையுநா ளென்றோ
ஆசுமெய்க் கவியார் அண்ணலே எனது
அருண்மொழி அரசெனும் பொருளே. 64

தோலொடு குருதி தசைமுத லியவாந்
தொடக்கினை யானெனப தகற்றி
பாலொடு நீரைப் பகுத்திடு மனமபோல்
பரநிலை காணுநா ளென்றோ
வேலொடு மயில்மீ தேறினின் றுலவும
வித்தகன திருவுரு வாறேய்
ஆலமார் விழியார் பாலனு காத
அருண்மொழி அரசெனும பொருளே. 65

வெண்திரு நீறும் அக்கமா மணியும
வினையறு முனதடி பரவும
தொண்டரின கூட்டு முனதருட் பொலிவும
தூயநன் நிலையுமுன தனது
தொண்டனு மெனக்குக் குறைவற வுதவி
சுகவுரு வடையுமா றருளவாய்
அண்டர்கள பரவும அமலமெய்ஞ் ஞான
அருண்மொழி அரசெனும் பொருளே. 66

தவமுதல் கொடையும் புலவயப் பொறியைத்
தன்வயப் படுத்தலு மான
பவமறு குணங்கள் ஒன்றுமில் அடியேன்
பயனற இவண்திரி கின்றேன்

நவமிகு முனது திருவடி மலரை
நலனுற வெனதுளத் தமைத்தே
அவமற வெனதுள் அறியவும் அருளாய்
அருண்மொழி அரசெனும பொருளே. 67

அருளுறும் அடியர் தமதுள மெனுமோர்
அம்புயத் தொளிர்குரு பரனே
தெருளுறுங் கலைகள் பலபல உணர்ந்து
தெளிந்தவர் மிகப்பெருந் தெளிவே
மருளறுத் தெனக்குன் திருவடி அருளி
மனமறும் பதமெனக் கருள்வாய்
அருள்அருள எனுநல் அன்பருக் கருளும
அருண்மொழி அரசெனும் பொருளே. 68

உருசிபல் வேறாய் சாரமொன் றாகும
உண்மைபோல் அறிஞர துளத்தே
தெருளுரு வாக விளங்குவ தெற்குத்
தெளிவுற விளங்குமா றருளால்
முருகெழு மலர்கொண் டனுதினம் பணியும்
மூவுரு ஓருரு வானாய்
அருகலில் பதந்தான் அடியனேற் கருள்வாய்
அருண்மொழி அரசெனும் பொருளே. 69

## சரணப்பத்து

என்னா ரமுதே யின்பே சரணம்
ஏழைக் கிரங்கி யருள்வோய் சரணம்
கன்னா ருரித்தே காத்தாள் சரணம்
கருதா மறவா நெறிதா சரணம்

பொன்னா ரமுதப் பொருளே சரணம்
புலையாம் பிறவி யறச்செய் சரணம்
என்னா யகனே சரணம் சரணம்
இன்பார் கிருபா னந்தா சரணம் 70

துன்னுந் தூய வடிவே சரணம்
சொல்லோர் மொழியே தொழுதேன் சரணம்
சன்ம மொழிக்கும் சதுரோய் சரணம்
சச்சிதா னந்தம தானோய் சரணம்
அன்பால் எவையும் அருள்வோய் சரணம்
அறுமர் முகன்தன் அடியோய் சரணம்
மன்பே ரறத்தின் மகிபா சரணம்
மாவாழ் கிருபா னந்தா சரணம். 71

அருமா மறைப்பொருள் தெரிப்பாய் சரணம்
அடியேன் தனக்கிங் கருள்வோய் சரணம்
மருவார் தணிகை மருந்தே சரணம்
மாயை யறவே செய்வாய் சரணம்
கருவார் பிறவிக் கடிந்தாள் சரணம்
கண்ணே மணியே கனிந்தாள் சரணம்
குருவாய் வந்திங் காண்டாய் சரணம்
குலமார் கிருபா னந்தா சரணம். 72

சனன மரணம் தவிர்ப்பாய் சரணம்
சண்முக னருள்பெறு சதுரோய் சரணம்
கனக வல்லி கண்ணே சரணம்
கனியே கரும்பே கனிந்தாள் சரணம்

மனனஞ் செயநீ வருவோய் சரணம்
மதிதா ஞான மணியே சரணம்
தனமே தணிவே தயைசெய் சரணம்
தவநிறை கிருபா னந்தா சரணம். 73

தாமந் தரித்த சதுரோய் சரணம்
தணிகை முருக னடியோய் சரணம்
வாமம் வாய்ந்த வடிவே சரணம்
வகையென் சொல்லாய வரநீ சரணம்
காம மாதி களைவாய் சரணம்
கருத்தி லுன்னடி காட்டாய் சரணம்
சேம வைப்பே தெளிவே சரணம்.
சீரார் கிருபா னந்தா சரணம். 74

கன்ம மதனைக் களைவாய் சரணம்
கடையே னெனையுங் காத்தாள் சரணம்
பன்னு மறைப்பொருள் பகர்வாய் சரணம்
பாதந் தந்தாள் பரனே சரணம்
என்ம னத்து மிருப்பாய் சரணம்
எழிலார் மணியாம எந்தாய் சரணம்
வன்ம னத்தை வதைப்பாய் சரணம்
வடிவார் கிருபா னந்தா சரணம். 75

தேவரும் தேட அரியாய் சரணம்
திகழ்மா மறைமுடி தெரிப்பாய் சரணம்
மூவருங் காணு முடிவே சரணம்
முத்தா அடியேன் முனம்வா சரணம்

யாவரும போற்றும எழிலோய் சரணம
யாக்கை சீயல வென்றாய சரணம
மாவடி யென னுளம வைபபாய சரணம
மாதவ கிருபா னந்தா சரணம. 76

என்னை யென்னில் அருளவாய் சரணம
ஏது மறியா இளையேன சரணம
சின்னஞ் சிறுவன ஆளவாய் சரணம
சிறியேன செயபிழை கருதாய சரணம
மனனே மணியே மகிழந்தாள சரணம
மாவாழ ஞான மருநதே சரணம
சொனனேர் அனபர் துணையே சரணம
தூயநற கிருபா னநதா சரணம. 77

கலைபபொருள ஆழும காட்டாய சரணம
கணணே மணியே கனிந்தாள சரணம
அலைவுறு மனததைத அடக்காய சரணம
ஆகமப பொருளநீ ஆனாய சரணம
நிலையில் உலகைக கருதாய சரணம
நீஙகா துளளுறை நிமலா சரணம
தலைவ னெனுமபெரு தகவோய் சரணம
சார்தவக கிருபா னந்தா சரணம. 78

என் துதி எனறும ஏறபாய் சரணம
இலங்குன அருளைத் தருவாய சரணம
பொனபுரை நீறறுப புனிதா சரணம
பொனனே மணியே போநதாள சரணம

தன்னே ரில்லாத் தனியே சரணம்
தருவாய் நின தருள் சார்ந்தேன் சரணம்
அன்னே எனையும் ஆள்வாய் சரணம்
அபபா அடியேன சரணம் சரணம். 79

## போற்றிப் பத்து

சத்திய ஞானா னந்தத் தனிப்பெருஞ் சுடரே மேலாம்
தத்துவ முணர்த்து தற்கு சற்குரு வடிவந் தாங்கி
உத்தமக் கிருபா னந்த ஒளிர்பெயர் பூண்டு வந்த
தத்தனி ஞான மூர்த்தி னடிமலர்ப் பாதம போற்றி.

பங்கமார் மலங்கள் தம்மைப் பாரிடச் செய்தற் காக
எங்குமாய்சத்தாய் சித்தாய் இலங்கிடுமுருகன் தன்னை
மங்குரு ஞானந் தன்னால் மருவிடு மாறு செய்யும
பொங்குசீர்க் கிருபா னந்தப்பொன்மலர்ப்பாதம்போற்றி

சத்தினையன்பால் தம்மைச்சார்ந்தவர்க் குபதேசித்து
சத்தின துருவ மாக்குந் தனமையால் சற்குருருப்பேர்
மெய்த்திறந் தன்னைக் காட்ட மேவியக் கிருபா னந்த
உத்தமக் குரவ னார்தம் ஒண்மலர்ப் பாதம போற்றி

அந்தமில் சம்பு வீன்ற அழகுறு முருகன் தானே
எந்தமைக் காக்கும்வண்ணமெழிற் தருவடிவந்தாங்கி
சந்தத மானந் தத்தில் தங்கிட வருள் புரிந்த
சுந்தரக் கிருபா னந்த தூயமலர்ப பாதம போற்றி.

காமமேமுதலாந் துட்டகளங்கமதொழித்துச்செவ்வே
தாமமாம வீட்டி லென்னைத் தங்கிட வருள்பு ரிந்து
சேமமார் இன்பந் தன்னிற் சேர்ந்திடச் செய்ய வந்த
நாமமார் கிருபா னந்த நன்மலர்ப் பாதம் போற்றி.

உன்னருந்தவத்தின்மிக்க உயர்வுறுங்கிருபானந்தன்
பின்னமார் துவித மின்றி பிறங்கிடு பிரமந் தன்னில்
என்னது மனமொ டுங்கி எழில்பெற நிற்கச் செய்யும
தன்னிகர் இல்லா வன்னோன் தனிமலர்ப் பாதம் போற்றி.

மாசினை மனத்தனுக மருளுறும மருளன் தன்னை
ஆசிலா நல்லுளத்தோ னுகிடக் கருணை கொண்டு
மாசிலா ஞானந்தனனில்வயங்குறச்செய்த தூயோன்
பேசிடுங்கிருபானந்தன்பிரசமெனமலர்த்தாளபோற்றி

தவமுளோர் வணங்கத் தக்க தகையுடைக் கிருபானந்தன்
பவமதை யொழிக்க வெண்ணிப் பகர்தரு முத்தி தன்னைப்
பவமதி லுள்ளார் யார்க்கும் பரிவுடன் அளித்து செவ்வே
பவமதை நீக்கி யாளும் பண்புடைப் பதங்கள் போற்றி. 87

பவமுதல் வியாதி தீர்க்கும் பண்புள கிருபா னந்தன்
இவைகளின் வேரு யென்றும் இலங்கிடு பிரமந் தன்னை
நவையிலா வாக்கியத்தால் நண்ணிடச்செய்திங் கென்றன்
பவமதை யொழிய வைக்கும் பதமலர் போற்றி போற்றி.

மங்குறு புத்தியுள்ள மக்கண்மீ திரக்கங் கொண்டு
பொங்குபேரளியின்மேலாய்ப் போற்றுறுங்கிருபானந்தன்
அங்கவர் பவத்தின் மீண்டும் அணுகாமற் கரைய தேற்றித்
துங்கமாய் வாழச் செய்த துணைமலர்ப் பாதம் போற்றி.89

## அபயம்

ஆசறு முருகநன் வடிவமா யுளநினை
நேசமுஞ் செய்திலேன் நின்மல நிலையுறும்
வாசனை கனவினு வகுத்தில னுளத்தினில்
ஆசொழி நற்க்ருபா னந்தவுன் னபயமே. 90

புத்தியின் மந்தனுன் புண்ணியா வாண்டருள்
மத்திய நன்னிலை வழங்குவாய் வேண்டினேன்
உத்தியு மீந்துள ளூறுசுகங் காட்டுவாய்
அத்தனே நற்க்ருபா னந்தவுன் னபயமே. 91

சகலமும் வல்லநற் சற்குரு வானவா
பகலவன் போலுளம் பளகறச் செய்குவாய்
கனமணி மார்பனே கடையவ னுளமதி
லனக வாக்ருபா னந்தவுன னபயமே. 92

## அடைக்கலம்

செய்யவள் மருகனுஞ் சிர்க்கும ரேசர்தம்
துய்யநன மலரடித் தொண்டரா யுள்ளவர்
உய்யநன் வழிதனை யுரைத்துல குவக்கவே
செய்யுநின் னடிமலர்ச் சேர்ந்தன னடைக்கலம். 93

கருதரு மாயையைக் களைந்திட ஞானமாம்
பெருமபொரு ளிங்கருட் பேரருட் குன்றமே
அருமபொரு ளாயொளிர் அசிபதத் துண்மையை
இருநிலந் தனிலருள் இறைவநின் னடைக்கலம். 94

மூடனு யுளவெனை முற்றுமே யாண்டருள்
ஏடணை யறநிதம் இனிதருட் செய்குவாய்
சோதனை யாதுசொல் துகளறுஞ் சோதியே
வாதனை தீரவந் தருள்கநின் னடைக்கலம். 95

கோசம் கடக்கும் வழிதனைக் கூறியே
நேசமாஞ் ஞானம் நினைவுறச் செய்குவாய்
பாசமாம் வெவ்வினைப் பாரி லெனைவிட
ஆசறு நன்மொழி அருளுநின் னடைக்கலம். 96

மும்மல மற்றுமே லுண்மையாம் நிலையினை
இம்மலக் கூட்டுடன் இருந்திவண் காண்பதே
செம்மையாஞ் சிவன் முத்தியென் றியம்பிய
எமமை யாள்குர வாநின னடைக்கலம். 97

## பல்லாண்டு

போற்றிடவும் வகையறியேன் புகன்றிடவுந்
துதியறியேன் புகன்ற வெல்லாம்
ஏற்றியுளந் தனில்சேர்த்திங் கேகாந்த
மினியெய்த எழிலார் ஞானம
ஊற்றெனவிங் கெற்கென்றும் உளம்பதிய
மிகவூட்டும் உவமை யில்லா
பாற்கடல்போல் ஒளிர்கிருபா னந்தகுரு
நாதற்கே பல்லாணடு கூறுதுமே. 98

கடுகடுத்த முகமென்றுங் காட்டாமல்
பேரொளியால் கனிவே காட்டி
அடுத்தவரை ஆதரித்து சாதனத்தால்
மோட்சமதை அறிவில் காட்டும்
தடுத்தலிலா சிவஞான வடிவார்ந்த
அருட்குருவாய்ச சாந்த முற்றே
படுத்தபெரு மாயையறப் போதிக்கும்
அருண்மொழிக்கே பல்லாண்டு கூறுதுமே. 99

சிவன்முத்தி நிலையெய்தச் சிறியேனைத்
        தடுத்தாண்டுச் சீரே நல்கி
ஏவருள மும்மகிழ எழிலார்மா
        ஞானநெறி எவையும் நல்கும்
நாவலனும் பெரியோன்சீர் சொல்லயெளி
        தாகாது நானோ சொல்வேன்
பாவலரே ஏத்துபுகழ் திருவருளார்
        அருண்மொழிக்கே பல்லாண்டு கூறுதுமே. 100

## வாழி

வள்ளல்கிரு பானந்த வாரிதாள் வாழியே
விள்ளுமி ராமலிங்க விமலனும் வாழியே
கள்ளமில் அடியவர் கருத்துடன் வாழியே
எள்ளலில் முருகனோ டீசனும் வாழியே.

திருப்புகழமிர்தம் அச்சகம், சென்னை-2. 15—12—55.

இந்நூல் கிடைக்குமிடம்

★


ந. மு ஏழுமலை,

நரசிங்கபுரம்,

பேரம்பாக்கம் P. O.

திருவள்ளூர் தாலுக்கா, செங்கல்பட்டு Dt.


---


திருப்புகழமிர்தம் அச்சகம், 144 சாமிநாயகன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை :: சென்னை-2. 3-7-56